29th August 1961]

(இ) அது விஷயமாக சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) இல்லை, ஐயா.

(இ) இந்தக் கேள்வி எழவில்லை.

SRI V. K. KOTHANDARAMAN : சார், சமீபத்தில் தொழிலாளர்களுக்கும், மில் முதலாளிகளுக்கும் ஏற்பட்ட சச்சரவின் காரணமாக ஒரு விசாரணைக் கோர்ட் அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக ஆள் குறைப்பு திட்டம் ஏற்படுத்த வேண்டும் என்பது முதலாளிகளின் நோக்கம். இம்மாதிரி பழைய வேலை பளுவைத் திணித்தால் தொழிலாளர்களால் வேலை செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் கேட்ட கேள்விக்கும் இப்போது கேட்கும் சப்ளிமென்டரி கேள்விக்கும் சற்று வித்தியாசம் இருக்கிறது. பஞ்சாலைத் தொழிலாளர்கள்பற்றி அவர்களுடைய சிபார்சு பாரா 101-104-ல் குறிப்பிட்டிருப்பது அவர்களுக்கு அதிகமான சம்பள விகிதம், சிக்கன சீரமைப்புபற்றியும் பேச்சு வார்த்தை நடத்தப்பட வேண்டும் என்று இருக்கிறது. அதன் அடிப்படையில் ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டு பரிசிலனை செய்யப்பட்டது. கனம் அங்கத்தினர் வேலை பளுவை அதிகரித்து ஆட்களைக் குறைக்க வேண்டுமென்று சொல்வதாக தெரிவிப்பது சரி அல்ல.

SRI V. K. KOTHANDARAMAN : இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கிற கமிட்டிக்கு முன்னால் யோசனைக் கூறுவதற்கு வேண்டி இதில் இந்த ராஜ்யத்தில் இருக்கும் நிபுணர்களைப் போடாமல் இதற்குப் பக்கத்து ராஜ்யத்தில் இருக்கும் நிபுணர்களைப் போடுகிறார்களே. நம்முடைய ராஜ்யத்திலிருந்து நிபுணர்களைப் போட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது நியமிக்கப்பட்டிருக்கும் கமிட்டியில் சேர்மேனாக ஸ்ரீ ராமசாமி கவுண்டர், இண்டஸ்ட்ரியல் டிரிபுனல், சென்னை, இரண்டு அசெஸ்ஸர்கள், (1) டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தி, ப்ரோபசர் இன் டெக்ஸ்டைல் டெக்னாலஜி, அளகப்பா காலேஜ், கிண்டி, (2) ஸ்ரீ எம். ஏ. நடராஜன், இன்ஸ்பெக்டர் ஆப் பாக்டரிஸ் (ப்ரொடக்ஷன்) போட்டிருக்கிறார்கள்.

Film Actors (Award of Prizes)

* 1485 *Q.*—SRI M. KALYANASUNDARAM (on behalf of SRI N. K. PALANISAMI) : Will the Hon. the Minister for Finance be pleased to state with reference to the answer given to Question No. 1022 on 23rd March 1961 whether the Centre has consulted this Government before awarding prizes to the best film actors and technicians in the State?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.